2019 ஜூலை 20] [திரு. சு. ரவி]

செயல்படுத்துவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் 9 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்தார்கள். தற்போது, பணிகள் நிறைவடைந்து, மொத்தம் 280 தெருக்கள், நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதில், 92 தெருக்களில் சீரமைப்புப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 188 தெருக்கள் குண்டும், குழியுமாக உள்ளதால், மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகின்றனர். எனவே, மீதமுள்ள 188 தெருக்களையும் சீரமைப்பதற்கு, இதை சிறப்பு இனமாக எடுத்துக்கொண்டு இந்த ஆண்டே நிதி ஒதுக்கீடு செய்து, அந்த 188 தெருக்களையும் சீரமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சாலைகள் சீரமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையினை இங்கே வைத்துள்ளார். பல்வேறு நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் குடிநீர்த் திட்டப் பணிகளும், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. அந்தப் பகுதிகளில்தான் இந்தமாதிரியான சூழ்நிலை இருக்கின்றது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். அதேபோல,* IUDM, TURIF *போன்ற நிதிகளிலிருந்து, எந்தெந்தச் சாலைகள் சேதமடைந்துள்ளன என்று கணக்கிடப்பட்டு, நிதிநிலைமைக்கேற்ப சாலை சீரமைப்புப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—45

(எ) ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியத்தினை தரமுயர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியத்தினை வட்டமாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, திரும்பவும் சொல்லுங்கள்.*

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியத்தினை வட்டமாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஏனென்றால் அங்கு 32 வருவாய்க் கிராமங்கள் உள்ளன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இங்கு அறிவித்துள்ளார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். ஏற்கெனவே அரசின் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் அவசியம் கருதி, அதன் முக்கியத்துவம் கருதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஏ) ஒட்டன்சத்திரம் தொகுதி, பெரிய ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*